ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/38 - 2020 ජනවාරි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.23

*2159/38 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பு**

*அரசியல் அமைப்பின் 44(5) இன் கீழ் விடயங்கள் மற்றும் செயற்பாடுகளினை ஒப்படைத்தல்*

*அமைச்சரவையின் உறுப்பினரல்லாத இராஜாங்க அமைச்சர்கள் தொடர்பிலான விடயங்கள் மற்றும் செயற்பாடுகளினை ஒப்படைப்பதற்கு அதியுத்தமராம் சனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள 19/ 3391/ 201/ 005 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு, 2019.12.10 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் கிடைக்கப்பெற்ற உடன்பாடு மற்றும் அங்கீகாரத்தின் கீழ் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் நுகர்வோர் நலன்புரி இராஜாங்க அமைச்சர் கௌரவ அனுர பிரியதர்சன யாப்பா அவர்களின் பொறுப்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள், செயற்பாடுகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் இதில் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இருத்தல் வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 44(5) என்றவாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஷமல் ராஜபக்ஷ,
உள்நாட்டு வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு
மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சர்.

*2020, சனவரி 07.*

**அட்டவணை**

**உள்நாட்டு வர்த்தகம் மற்றும் நுகர்வோர் நலன்புரி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *செயற்பாடுகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *அமுலாக்கப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைகள்* |
| 1. உள்ளூர் சந்தையில் நுகர்வோர் பொருட்களினை, தரமான மட்டத்திலும், பற்றாக்குறையின்றியும் மற்றும் நியாயமான விலையிலும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>2. நுகர்வோர் பொருட்கள் தொடர்பான தேசிய விலைக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.<br>3. சந்தை போட்டித் தன்மையை உறுதிப்படுத்தி சந்தையினுள் முறைசாரா பொருட்கள் பற்றாக்குறை ஏற்படுவதைக் குறைத்தல் மற்றும் சுய கட்டுப்பாட்டை ஊக்குவிக்கக்கூடியவாறு நடவடிக்கை எடுத்தல்.<br>4. தரத்தினைக் கொண்ட பொருட்களினைக் குறைந்த போட்டி விலைகளில் தொடர்ந்து வழங்கும் விநியோகஸ்தர்களின் ஒட்டுமொத்த நடத்தையினையும் தடுத்து நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல். | 1. நுகர்வோர் விவகார அதிகார சபை.<br>2. வரையறுக்கப்பட்ட இலங்கை சதொச.<br>3. வரையறுக்கப்பட்ட இலங்கை ஜெனரால் ட்ரேடிங் கம்பனி.<br>4. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம். | • நுகர்வோர் விவகாரம் தொடர்பிலான அதிகார சபைச் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க).<br>• நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க). |

02-91